மத்திய மாகாண சபையின் வலயக் கல்விக் காரியாலயம் - மாத்தளை

ZONAL EDUCATION OFFICE OF CENTRAL PROVINCIAL COUNCIL- MATALE

Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education

# e-Learning Programme - 2020

| Grade - 09 | Assignment - 01 | Tamil Language |
|---|---|---|

## பகுதி 1

அ )எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

1. ஜனனம் என்பதன் ஒத்தக்கருத்துச்சொல்
1. இறப்பு 2.வாழ்வு 3.வாழ்க்கை 4.பிறப்பு

2. கிரந்த எழுத்துக்களின் சொற்கூட்டம் அல்லாதது யாது?
1. க் ச் ட் த் ப் ற் 2. ஜ ஸ ஷ ஹ க்ஷ ஸ்ரீ 3. ஜ ஷ ஹ 4. .ஹ க்ஷ ஸ்ரீ

3. கன்னங்கரிய என்பது
1. அடுக்கிடுக்குத்தொடர் 2.இணைமொழி 3.அடுக்குத்தொடர் 4.இரட்டைக்கிளவி

4. உயிர்மெய் நெடில் எழுத்துக்குரிய மாத்திரை யாது?
1. ஒன்று 2.ஏறிய உயிரின் மாத்திரை 3.அரை 4. இரண்டு

5. தால் என்றால்
1. நாக்கு 2.நெல் 3.பத்திரிகை 4.மூக்கு

6. ஆ, எ யா என்னும் எழுத்துக்கூட்டம்
1. உயிர்மெய் எழுத்து 2.சுட்டெழுத்து 3.மெய்யெழுத்து 4.வினாவெழுத்து

7. விளியுருபை ஏற்காத பெயர்ச்சொற்கள் யாவை?
1. தன்மை முன்னிலை பெயர் 2.பொருட்பெயர் 3.இடப்பெயர் 4.காலப்பெயர்

8. இதயம் அழுகிறது என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
1. அன்பு முகைதீன் 2.யோ.பெனடிக்பாலன் 3. ராணி சிதம்பரநாதன் 4.நாவலர்

9. Internet மூலமாக தகவல்களை பெறுவது இலகுவானது. Internet என்பது
1. மின்னஞ்சல் 2.இணையம் 3.தொலைநகல் 4. மின்பிறப்பாக்கி

10. பயம், கோபம் , பொறாமை போன்றவைகள் எவ்வகை உணர்வுகள்

1. மேம்பாட்டு உணர்வு 2. தாழ்த்தும் உணர்வு 3. உற்சாக உணர்வு 4. சாதிக்கும் உணர்வு

(10 X 1 = 10 புள்ளிகள்)

## பகுதி 2

ஆ) கீழே தரப்பட்டவை சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடையாளமிடுக.

1. உயிரெழுத்து 18 ஆகும். (……….)
2. கண் என்பது குணப்பெயராகும். (……………)
3. பெயர்சொற்கள் வேற்றுமை ஏற்பதை சிறப்பு இலக்கணமாக கொண்டவையாகும். (……….)
4. முதலாம் எட்டாம் வேற்றுமைகளுக்கு உருபு இல்லை. (……….)
5. வல்லின எழுத்துக்கள் ய் ர் ல் வ் ழ் ள் ஆகும். (……….) ( 5X 2 = 10 புள்ளிகள்)

இ ) பின்வரும் இணைமொழிகளை வைத்து பொருள்விளங்க வாக்கியம் அமையுங்கள்.

1.மூலை முடுக்கு
2.சுகதுக்கம்
3.அரைகுறை
4.கட்டித்தழுவி
5.வற்றிவரண்டு (5 X 3 = 15 புள்ளிகள்)

ஈ)பின்வரும் வினாக்கள் எல்லாவற்றிற்கும் விடை தருக.

1. நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் ?
2. ஆறாம் வேற்றுமையின் உருபு , பொருள் யாது?
3. ரோஜாவின் கர்வத்திற்கான காரணம் என்ன?
4. "உள்ளே போங்க பாயாசம் இருக்கு. போய்ச்சாப்பிடுங்க" யாரால் யாருக்கு கூறப்படுகிறது?
5. ஒரு சின்னஞ்சிறு பூச்சி என்ற கதையினை எழுதியவர் யார்? இக்கதை எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது?
6. பூச்சியின் மேலே மகன் ஆத்திரம் கொள்ளக்காரணம் யாது?
7. உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப்பொருள்கள் எவையென கூறப்பட்டுள்ளது?
8. செய்வினை , செயப்பாட்டுவினை வாக்கியங்களிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
9. "அழைப்பிதழ்" பயன்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினை குறிப்பிடுக.
10. சிவனொளிபாதமலை யாரால் பூசிக்கப்படுகிறது? (10 X 3 = 30 புள்ளி)

உ) பின்வரும் விடயங்களில் ஒன்றினை தெரிவு செய்து 75 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

1. உமது பாடசாலையில் இடம்பெறவுள்ள தமிழ்மொழித்தின விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்குக. அல்லது ,

2. நீர் சென்ற கல்விச்சுற்றுலா பற்றி உமது நண்பன் / நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

( 15 புள்ளிகள்)

ஊ) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத்தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. நான் கண்டு களித்த மலையகக்காட்சி
2. மாணவர்களை பாதிக்கும் போதைப்பொருள் பாவனை
3. தாய்மொழிக்கற்றலின் அவசியம்
4. விஞ்ஞான வளர்ச்சியின் விந்தைகள் ( 20 புள்ளிகள்)